# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அக்டோபர் மாத அவசரக்கூட்டம் 06.10.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சியில் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்வு செய்து குடிநீர் வினியோக உபவிதிகளில் திருத்தம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்கள் செயல்முறைகள் ந.க.எண்.10049/2019/குவ3 நாள் 05.02.2021-ன் மூலம் பொது அங்கீகாரம் (General Approval) வழங்கி உள்ள விவரம் மன்றத் தீர்மானம் எண்.2455 நாள் 12.02.2021-ன் படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு, கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட அரசிதழில் செப்டம்பர் 16/2021-ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்படி அரசிதழ் பிரசுரத்தினை இறுதி ஒப்புதல் (Final Approval) பெறும் பொருட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/256/2020

**தீர்மானம் எண்.2578 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக தொலைபேசி செய்தி நாள் 01.10.2021-ல், இந்நகராட்சியில் தெருவிளக்கு அமைப்பதற்கு, புதிதாக மின் கம்பம் அமைத்து கேபிள் இழுத்து LED Fittings அமைப்பதற்கும், ஏற்கனவே இருக்கும் மின் கம்பங்களில் கேபிள் இழுத்து LED Fittings அமைப்பதற்கும் கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், தெருவிளக்கு அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்கள் மற்றும் மதிப்பீட்டுத் தொகை குறித்த விவரம் பின்வருமாறு,

**I. புதிதாக மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைக்க வேண்டிய இடங்கள்**

| வ.எண். | தெருவின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | சாஸ்தான்கரை | 3 | 46,00,000/- |
| 2 | ஆசாத் நகர் (பிள்ளையார் கோவில் அருகில்) | 2 | |
| 3 | கொட்டில்பாடு | 12 | |
| 4 | வாய்க்கால் கரை | 26 | |
| 5 | பரம்பு விளாகம் | 2 | |

| | | | |
|---|---|---|---|
| 6 | சிங்கன்காவு முதல் நரிக்கல் வரை | 16 | |
| 7 | தைநாத்தன்கரை | 13 | |
| 8 | நரிக்கல் முதல் வெள்ளியாகுளம் வரை | 56 | |
| 9 | உப்பளம் பகுதி உரக்கிடங்கு | 20 | |
| | **மொத்தம்** | **150** | |

**II. ஏற்கனவே இருக்கும் மின்கம்பங்களில் புதிதாக கேபிள் இழுத்து தெருவிளக்கு அமைக்க வேண்டிய இடங்கள்**

| வ.எண். | தெருவின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|---|
| 1 | வாய்க்கால் தெரு | 4 | 11,20,000/- |
| 2 | பவுண்டரி சாலை | 5 | |
| 3 | சிங்கன்காவு | 11 | |
| 4 | சாஸ்தான்கரை | 6 | |
| 5 | பரம்பு விளாகம் | 4 | |
| 6 | கொட்டில்பாடு | 9 | |
| 7 | நரிக்கல் சாலை | 2 | |
| 8 | ஆசாத் நகர் (பிள்ளையார் கோவில் அருகில்) | 4 | |
| | **மொத்தம்** | **45** | |

எனவே மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.57,20,000/- (46,00,000/- + 11,20,000/-) -ஐ திட்ட நிதியின் கீழ் முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1050-1/2021/இ1

**தீர்மானம் எண்.2579 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/தி2 நாள் 08.09.2021-ல் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொது மக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளதில், நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் 2021-22 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பினை வெளியிட்டுள்ளதால், நகராட்சிகளில் விளையாட்டு திடல்கள் மற்றும் பூங்காக்கள் மேம்படுத்துவது தொடர்பாக விரிவான திட்ட அறிக்கையினை சமர்ப்பிக்க

தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இந்நகராட்சிக்குட்பட்ட **வார்டு எண்.7-ல் இந்திரா காலனி பகுதியில் பூங்கா அமைத்தல்** பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள **மதிப்பீடு ரூ.49.00 இலட்சம்** தொகையினை முழு மானியமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்க கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1051-2/2021/இ1

**தீர்மானம் எண்.2580 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21287/2021/EA2 நாள் 02.10.2021-ன் படி, குளச்சல் நகராட்சியில் குடிநீர் வினியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| **S.No** | Name of the Post | **Requirement as per norms** | **Present Strength** | **Balance needed** |
|---|---|---|---|---|
| 1 | Tank Maintenance Assistant | 12 | 0 | 12 |
| 2 | Electrician Grade II | 3 | 1 | 2 |
| 3 | Pump room Maintenance Assistant | 3 | 0 | 3 |
| 4 | Wireman | 3 | 1 | 2 |
| 5 | Wireman Helper | 3 | 1 | 2 |

மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒருநாளுக்காக ஊதிய விபரம் பின்வருமாறு:

| **Sl. No** | **Details** | Tank Maintenance Assistant | Electrician Grade II | Pump room Maintenance Assistant | Wireman | Wireman Helper |
|---|---|---|---|---|---|---|
| **1** | Basic salary for one day | 520.65 | 708.00 | 520.65 | 708.00 | 556.00 |
| **2** | Service charge for the agency including the cost of uniforms and other safety items required to be given to the supplied manpower | 36.45 | 49.56 | 36.45 | 49.56 | 38.92 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **3** | GST on Basic salary of the man power and on the service charge of agency (18 % of A and 18 % of service charge) | 100.28 | 136.36 | 100.28 | 136.36 | 107.09 |
| **4** | Employer contribution for EPS 8.33%, EPF 3.67%, EPF admin 0.5% and EDLI 0.5% | 67.68 | 92.04 | 67.68 | 92.04 | 72.28 |
| **5** | Employer contribution of ESI 3.25% of | 16.92 | 23.01 | 16.92 | 23.01 | 18.07 |
| **6** | **Total cost** | **741.98** | **1008.97** | **741.98** | **1008.97** | **792.36** |

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில், மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் குறித்த விவரம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approve d in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251) Rs. | Total salary per month per person Rs. | Total salar y per annu m per perso n Rs .in lakh | No. of person to be engaged | Total Budget to be provide d per year Rs in Lakh | Total Value to be put in to tender Rs. In lakh |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | **Water Supply-** Tank Maintenance Assistant | 520.65 | 741.98 | 22259.35 | 2.67 | 12 | 32.05 | 22.69 |
| 2 | Electrician Grade II | 708.00 | 1008.97 | 30269.12 | 3.63 | 2 | 7.26 | 5.14 |
| 3 | Pump room Maintenance Assistant | 520.65 | 741.98 | 22259.35 | 2.67 | 3 | 8.01 | 5.67 |
| 4 | **Street Light** Wireman | 708.00 | 1008.97 | 30269.12 | 3.63 | 2 | 7.26 | 5.14 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | Wireman Helper | 556.00 | 792.36 | 23770.67 | 2.85 | 2 | 5.70 | 4.04 |
| **Total** | | | | | | | **68.28** | **51.68** |

எனவே குளச்சல் நகராட்சியில் குடிநீர் வினியோக பணிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், தரைமட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்காக தேவைப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு உதவியாளர் 12 நபர்கள், நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் பணிகளுக்கு தேவையான மின்னாளர் நிலை-II 2 நபர்கள், குடிநீரேற்று நிலைய பராமரிப்பு உதவியாளர் -3 நபர்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மின்கம்பியாளர் -2 நபர்கள், மின் கம்பி உதவியாளர் - 2 நபர்கள் ஆகியோர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று, வெளிக்கொணர்வு முகமை (Outsourcing) மூலம், பணியமர்த்தி கொள்வதற்கும், மேற்காணும் இனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.178.49 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்.**1169-1/2021/**இ**2

**தீர்மானம் எண்.2581 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 02.10.2021ம் தேதிய ந.க.எண்.21287/2021/EA2ல் வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| SI. No. | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | **BOV** | **11** | **12** | **-** |
| 2 | **LCV** | **5** | **2** | **3** |
| 3 | **HCV** | **1** | **1** | **-** |
| 4 | **Tractor** | **-** | **-** | - |
| 5 | **Bobcat /JCB** | **-** | **-** | **-** |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | **Cleanliness Worker** | **62** | **29** | **33** |
| 7 | **Supervisor** | **12** | **4** | **8** |
| 8 | **Driver** | **7** | **3** | **4** |

மேற்கண்ட பணியாளர்களுக்கு ஒருநாளுக்காக ஊதிய விபரம் பின்வருமாறு:

| **Sl. No** | **Details** | **Cleanliness workers payment** | **Supervisor** | **Driver** |
|---|---|---|---|---|
| **1** | Basic salary for one day | 391 | 448 | 708 |
| **2** | Service charge for the agency including the cost of uniforms and other safety items required to be given to the supplied manpower | 27.37 | 31.36 | 49.56 |
| **3** | GST on Basic salary of the man power and on the service charge of agency (18 % of A and 18 % of service charge) | 75.31 | 86.28 | 136.36 |
| **4** | Employer contribution for EPS 8.33%, EPF 3.67%, EPF admin 0.5% and EDLI 0.5% | 50.83 | 58.24 | 92.04 |
| **5** | Employer contribution of ESI 3.25% of | 12.71 | 14.56 | 23.01 |
| **6** | **Total cost** | **557.21** | **638.44** | **1008.97** |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251) Rs. | Total salar y per mont h per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provide d per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Sanitary worker | 391 | 557.21 | 16716 | 2.06 | 33 | 66.19 | - |
| 2 | supervis or | 448 | 638.44 | 19153 | 2.30 | 8 | 18.40 | - |
| 3 | Driver | 708 | 1008.97 | 30269 | 3.32 | 4 | 13.28 | - |
| **Total** | | | | | | | **98.81** | |

எனவே குளச்சல் நகராட்சிக்கு தேவைப்படும் **தூய்மை பணியாளர்கள்** 33 **நபர்கள்**, **மேற்பார்வையாளர்கள்** 8**நபர்கள் மற்றும்**, **ஓட்டுநர்கள்** 4 **நபர்கள்**,ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை ரூ.296.43 இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**ந.க.எண்**.1168/2021/**எச்**1

**தீர்மானம் எண்.2582 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்கு, 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC Tied Grant) : 2020-21-ன் கீழ், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்காக இரண்டாவது தவணையாக ரூ.33,72,212/- விடுவிக்கப்பட்டதில், ரூ.34,00,000/- மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்ட 4 எண்ணம் பணிகளுக்கு, மன்றத் தீர்மானம் எண்.2558 நாள் 31.08.2021-ன் படி மன்றத் தீர்மானம் எண்.2558 நாள் 31.08.2021-ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில், ரூ.9,20,000/- மதிப்பீட்டில், Providing Liquid Chlorination systems in Office OHT (Inner & Outer) Bus stand OHT, Beach OHT, KSSS colony OHT பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Rowkal & Co.,<br>No.3, Zion Building,<br>Mission Hospital Complex,<br>East veli street, Madurai -1 | மதிப்பீட்டை விட 6.62% குறைவு<br>(ரூ.7,67,650/-) |

| | | |
|---|---|---|
| 2. | M/s.Vignesh Hydro Electro mech, No.76-B/2, TPK Road, Visalam. Plot No.7. A.R Thoppu 2nd Street, Vasantha Nagar, Madurai - 3 | மதிப்பீட்டை விட 1.28% அதிகம் (ரூ.8,32,580/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Rowkal & Co., Madurai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 6.62% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**747-1/2021/இ1

**தீர்மானம் எண்.2583 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.7

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC-Tied Grant) : 2020-21 இரண்டாவது தவணை தொகையின் கீழ், ரூ.5,00,000/- மதிப்பீட்டில், Providing Room with Electrical arrangements for Liquid Chlorination systems in Office campus OHT, Bus stand OHT, Beach OHT, KSSS colony OHT பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு (ரூ.4,21,403.73/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.20% அதிகம் (ரூ.4,22,337.40/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**747-1/2021/இ1

**தீர்மானம் எண்.2584 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.8

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC-Tied Grant) : 2020-21 இரண்டாவது தவணை தொகையின் கீழ், ரூ.10,00,000/- மதிப்பீட்டில், Providing 2 Nos. New Borewells @ CMC Colony - Palathankarai and linking existing pumping line

பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.009% குறைவு<br>(ரூ.8,77,680.95/-) |
| 2. | திரு.T.இரவீந்திரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.094% குறைவு<br>(ரூ.8,76,928/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.094% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**747-1/2021/**இ**1

**தீர்மானம் எண்.2585 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.9

இந்நகராட்சியில், 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC-Tied Grant) : 2020-21 இரண்டாவது தவணை தொகையின் கீழ், ரூ.9,80,000/- மதிப்பீட்டில், Providing B.T Road @ Uppalam Compost yard entrance பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.008% குறைவு<br>(ரூ.8,57,988/-) |
| 2. | திரு.T.இரவீந்திரன்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>(ரூ.8,57,520/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**747-1/2021/**இ**1

**தீர்மானம் எண்.2586 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17-ல் பழைய சந்தை சாலையில் (Old Market road) அம்மா உணவகம் முதல் நரிக்கல் நாகராஜா கோவில் வரை மழைநீர் வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,90,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2565, நாள் 14.09.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, 01.10.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு (ரூ.8,62,952.75/-) |
| 2. | திரு.சி.தேவராஜ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.002% குறைவு (ரூ.8,63,251.40/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.இரவீந்திரன், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**1046-1/2021/இ1

**தீர்மானம் எண்.2587 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.11

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள பகிர்மான குழாய், பிரதான குழாய், மோட்டார்கள், பேனல் போர்டுகள், வால்வுகள், மின்சார இணைப்புகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் குடிநீர் வினியோகம் தொடர்பான அனைத்து பழுது நீக்கப்பணிகளையும் உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, 2021-22 ஆம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக தாயர் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2559, நாள் 31.08.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22% அதிகம் (ரூ.7,68,121.20/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு (ரூ.7,66,049/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**157-3/2021/இ1

**தீர்மானம் எண்.2588 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப்பாலம் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் சேதமடைந்துள்ள சூரிய ஒளியில் இயங்கும் சிறிய கோபுர மின் விளக்குகளை (Solar Mini mast lights) சீரமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2557, நாள் 31.08.2021-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு, 29.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Navaraj Volton, Engg.Pvt.Ltd., Thylaumoodu | மதிப்பீட்டை விட 0.31% அதிகம் (ரூ.96,800/-) |
| 2. | M/s.Success Engineering Puliyoorsalai | மதிப்பீட்டை விட 0.17% குறைவு (ரூ.96,340/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.Success Engineering, Puliyoorsalai நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.**1042/2021/இ1

**தீர்மானம் எண்.2589 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட அஞ்சாலிவிளை பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையம் எண்.403-ல் குழந்தைகளுக்கு எளிதான முறையில் பாடம் கற்பிக்கும் வகையில் பாட திட்டத்தை (1 முதல் 100 வரையிலும், A முதல் Z வரையிலும், உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், சுவைகள் மற்றும் நிறங்கள் ) சுவர் ஓவியமாக

வரையும் பணியினை மேற்கொள்வதற்கு, 04.10.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s. Mahendran Arts & Stickers,<br>Indra Vanika valagam,<br>Opp. James Hospital, Colachel | Rs.26,090/- |
| 2. | M/s.Harshith Paintings,<br>PGS Complex, Thamaraikulam street,<br>Railway Feeder road, Nagercoil | Rs.28,100/- |
| 3. | M/s.Biju Drawings,<br>13-169A, Melaperuvilai, Asaripallam (P.o) | Rs.32,750/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Mahendran Arts & Stickers, Colachel நிறுவனம் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1050-2/2021/இ1

**தீர்மானம் எண்.2590 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.14

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.15959/2021/WS1 நாள் 27.08.2021 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி கடிதம் ந.க.எண்.2841/2021/பி1 நாள் 31.08.2021 ஆகியவற்றில் தெரிவித்துள்ள படி, 01.09.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநரால், The Implementation of Jal Jeevan Mission (Urban) or Amrut 2.0 and Road ledger prepration தொடர்பாக நடத்தப்பட்ட காணொளி காட்சி ஆய்வு கூட்ட அறிவுரைகளில், உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வினியோகம், பொது சுகாதாரம் மற்றும் நீர் நிலைகள் ஆகியவை தொடர்பான வரைபடம் (Map) தயார் செய்து, அவற்றில் தற்போதைய நிலை மற்றும் இடைவெளி (Gap Analysis) தொடர்பாக விவரங்களை சுட்டிகாட்ட தெரிவிக்கப்பட்டது. மேலும் மேற்படி வரைபடங்களை Autocad Drawing Map-ல் தயார் செய்து 18.10.2021-ல் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட உள்ள வரைபடங்கள் குறித்த விவரம் பின்வருமாறு,

1. Water Supply Administrative and Municipal Boundary Map
2. Areas covered with tap water connections, Area not covered with tap water connections
3. Sanitation Map - Areas covered with sewerage network and Areas covered with onsite sanitation (Septic tanks)

மேற்காணும் வரைபடங்களை Autocad-ல் தயார் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.70,000/- க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-2/2021/இ1

**தீர்மானம் எண்.2591 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.15

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் காணொளி காட்சி அறிவுரை நாள் 01.09.2021-ல் தொலைநோக்கு திட்டம் : 2031-ன் கீழ், நகராட்சி சாலைகளை வகைப்படுத்துவதற்காக சாலை பதிவேடு (Road ledger) தயார் செய்து, சாலைகள், வடிகால் ஓடைகள், சிறுபாலங்கள் ஆகியவற்றை குறியீடு செய்த வரைபடம் தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில், சாலை பதிவேடு தயார் செய்வதற்கு நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு, சாலைகள், வடிகால் ஓடைகள் ஆகியவை இனம் வாரியாக அளவீடு செய்யப்பட்டது. அதன்படி, நகராட்சி சாலைகளின் நீளம், அகலம், வடிகால் ஓடையின் வகைகள் (Pucca, Kutcha) சிறுபாலங்கள் குறித்த விவரம், வடிகால் ஓடை சிறு பாலத்துடன் இணையும் சங்கிலி தொடர் (Chainage) குறித்த விவரம் ஆகியவற்றை துல்லியமாக அளவீடு செய்து வரைபடம் தயார் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000/- க்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-4/2021/இ1

**தீர்மானம் எண்.2592 அனுமதிக்கப்படுகிறது**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அக்டோபர் மாத சாதாரணக்கூட்டம் 29.10.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்.16, வரிவிதிப்பு எண்.148/2014001-க்கு குத்தகை காலம் 30.09.2021 உடன் மூன்று ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. மேற்படி கடைக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை எரிமம் நீட்டிப்பு செய்வதற்கான குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- இந்நகராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்.16-க்கு 01.10.2021 முதல் 30.09.2024 வரைக்கும் வாடகை தொகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி வாடகை தொகை உயர்வு செய்ய மன்றம் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

| வ. எண் | வணிக வளாகத்தின் பெயர் | கடை எண் | வரிவிதிப்பு எண் | வாடகைதாரர் பெயர் | தற்போதைய மாத வாடகை (மாதம் 1-க்கு GST தவிர) | 15% உயர்வு செய்த வாடகை | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை (ஜி.எஸ்.டி தவிர) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் | 16 | 148/2014001 | ஷாகுல் ஹமீது | 4000/- | 600/- | 4600/- |

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2593 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.2

இந்நகராட்சி பகுதியில் உள்ள வீடுகளில் உறிஞ்சு குழி (Soak pit) கட்டிய / கட்டப்படாத வீடுகள் குறித்த விவரத்தினை DBC பணியாளர்கள் மூலம் சேகரிக்க பதிவேடுகள் 1Q நோட் எண்ணம் 33, 2Q நோட் எண்ணம் 8 மற்றும அளவு கோல் எண்ணம் 26 ஆகியவை தாசன் அச்சகம், குளச்சல் நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.4965/-க்கு வாங்கப்பட்டது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து தாசன் அச்சகம், குளச்சல் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.889/2021/எச்1

**தீர்மானம் எண்.2594 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.3

இந்நகராட்சி திட்டப்பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினகரன், தினத்தந்தி மற்றும் தினமலர் நாளிதழ்களின் சிறப்பு மலரில் வெளியிட்ட வகையில், அதற்கான விளம்பர கட்டணத்தை வழங்க கேட்டு, பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ. எண் | நாளிதழ் பெயர் (ம) பதிப்பு விவரம் | பதிப்பு நாள் | பட்டியல் எண் (ம) நாள் | தொகை (ரூ) (GST உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | தினகரன் - தொழில் மலர் : 2021 M/s.KAL Publications (P) Ltd., Nagercoil | 12.10.2021 | 3300304141/ 12.10.2021 | 9975/- |
| 2. | தினத்தந்தி - தமிழக அரசின் 100 நாள் சாதனை மலர் : 2021 | 12.10.2021 | 2122 NGL/391003040 12.10.2021 | 9840.60/- |
| 3. | தினமலர் - தொழில் மலர் : 2021 M/s.Dina malar, Nagercoil | 13.10.2021 | NG2882/ 13.10.2021 | 9576/- |
| **மொத்தம்** | | | | **29391.60 (or) 29,392** |

மேற்காணும் தொகை ரூ.29,392/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து சம்மந்தப்பட்ட பத்திரிக்கை நிறுவனங்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2595 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.4

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் ந.க.எண் K.Dis No.30726/P3/2017 நாள் 10.01.2018-ன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) 45 தினக்கூலி பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 45 தினக்கூலி பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனத்திற்கு 29.10.2020-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் 31.10.2021-ல் முடிவடையும் நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.21287/2021/EA2-ன் படி, வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்களை

பணியமர்த்துதல் தொடர்பாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கோரி 13.10.2021-ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதன்மை அனுமதி பெறப்படும் வரையில், M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ள விலை நிரக்கில் 45 பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி நிறுவனத்தின் உடனான ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.809/2020/எச்1

**தீர்மானம் எண்.2596 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.5

இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில், தீயணைப்பு துறை அலுவலகம் முன்புறம் தாய்மார்கள் பாலூட்டும் அறை கடந்த 2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தற்போது தீயணைப்பு அலுவலகம் பேருந்து நிலையத்திலிருந்து மாற்றப்பட்டதை தொடர்ந்து, அந்த இடத்தில், துணிக்கடை நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி கடையின் முன்புறம் தாய்மார்கள் பாலூட்டும் அறை இருப்பதால், கடையின் முன்புறத் தோற்றம் முழுவதுமாக மறைக்கப்படும் நிலையில், அதனை மாற்றி அமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. எனவே தாய்மார்கள் பாலூட்டும் அறையை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள காதி கிராப்ட் கடையின் அருகில் மாற்றி அமைத்தல் மற்றும் அதன் மேற்கூரை திறந்த நிலையில் உள்ளதால், கூரை அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.13,400/- (including Materials and Labour charges) மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-11/2021/இ1

**தீர்மானம் எண்.2597 அனுமதிக்கப்படுகிறது**

## பொருள் எண்.6

இந்நகராட்சிக்குட்பட்ட கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் ஆகியவற்றில் அமைந்துள்ள கழிவறைகளின் தரை மற்றும் Closet பகுதிகள் உடைந்தும், கழிவறைக்கு செல்லும் குடிநீர் குழாய் மற்றும் கழிவு நீர் குழாய் ஆகியவற்றிலும் உடைவு ஏற்பட்டும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

மேலும் மின்சார வாரிய அலுவலகம் மற்றும் ஆதார் இ-சேவை மையம் ஆகியவற்றின் முன்பக்கம் நடக்கும் பகுதியில் (Passage portion) தரை பகுதி மற்றும் தரை ஓடுகள் (Tiles) உடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால், மேற்படி அலுவலகங்களுக்கு செல்வதற்கு சிரமம் ஏற்பட்டு வருவதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி வணிக வளாகங்களிலுள்ள கழிவறைகளில் பராமரிப்பு பணிகள், முதல் தளத்தில் நடக்கும் வழியில் (Passage) உடைந்துள்ள தரை ஓடுகளை சரி செய்வதல், ஆதார் இ-சேவை மையத்தில் பொது மக்கள் நலன் கருதி, கைப்பிடி (Hand rails) அமைத்தல் ஆகிய பணிகளை ரூ.3,50,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1221-7/2021/இ1

**தீர்மானம் எண்.2598 அனுமதிக்கப்படுகிறது**